## FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS
## TAMILNADU CIRCLE

**தேதி:- 30-07-2016**

அன்புமிக்க தோழர்களே,

வணக்கம். தமிழக ஃபோரம் கூட்டம் சென்னையில் தோழர். S.சிவக்குமார், மாநிலச் செயலர் மற்றும் அகில இந்திய தலைவர் (AIBSNLEA) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஃபோரம் கன்வீனர் தோழர். செல்லப்பா அனைவரையும் வரவேற்று பின்பு அகில இந்திய ஃபோரம் முடிவுகளை விளக்கினார்.கூட்டத்தில் கலந்து கொண்ட SNEA மாநிலச் செயலர் தோழர் .R.ராஜசேகர், AIBSNLOA அகில இந்திய தலைவர் தோழர். K.ராஜசேகரன், AIBSNLEA தலைவர்கள் தோழர்.R.குருபிரசாத், தோழர்.N.பங்காரு கிருஷ்ணசாமி, தோழர்.R.ரவி, ஆகியோர் உரையாற்றினார்கள். SNEA மாநிலத் தலைவர் தோழர் S.பாலசுப்பிரமணி, BSNLEU மாநில, மாவட்ட நிர்வாகிகள், AIBSNLEA மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதில் எடுக்கப்பட்ட முடிவுகள்:-

1. **ஆகஸ்ட்-3 ஆர்ப்பாட்டம். BSNL மற்றும் MTNLல் கேந்திர பங்கு விற்பனை என்கிற நிதி ஆயோக்கின் முன்மொழிவிற்கு கண்டனம்:**

20.07.2016 அன்று வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் BSNL மற்றும் MTNLல் கேந்திர பங்கு விற்பனை தொடர்பாக நிதி ஆயோக் ஆலோசித்து வருவதாக செய்தி வெளியாகி உள்ளது. விரைவில் இந்த முடிவினை அமுலாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்படும் என்று அந்த செய்தி சொல்கிறது. கேந்திர பங்கு விற்பனை என்றால், தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணிசமான பங்குகள் விற்கப்பட்டு அந்த நிறுவனத்தை BSNLன் கேந்திர பங்குதாரராக மாற்றுவது என்று பொருள். அதன் பின்னர் அந்த தனியார் நிறுவனம் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும். இது ஒரு ஆபத்தான முடிவு. நிதி ஆயோக்கின் இந்த முடிவை கண்டித்து நாடு முழுவதும் ஆகஸ்ட்-3 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

2. **ஆகஸ்ட்-10 பேரணி:**

23-07-2016 அன்று கூடிய அகில இந்திய ஃபோரம் நாடு முழுவதும் 'புன்முறுவலுடன் கூடிய சேவையை' 'மேலும் தீவிரப்படுத்துவதுடன், BSNL PRODUCTSகளை பொது மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் பேரணி நடத்துவது என முடிவெடுத்துள்ளது. அதில் நிர்வாகமும் கலந்து கொள்ள வேண்டுமென CMD உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் தலைமைப் பொது மேலாளர் அவர்களுடன் தமிழக ஃபோரம் தலைவர்கள் 30-07-2016 அன்று இது சம்பந்தமாக விவாதித்ததின் அடிப்படையில் கோவை,சேலம்,மதுரை,திருச்சி மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் மாநில மட்ட அதிகாரிகள் மற்றும் ஃபோரம் தலைவர்கள் தலமையில் பேரணி நடத்துவது எனவும், அதில் சேலத்தில் CGM கலந்து கொள்வது எனவும், முடிவெடுக்கப்பட்டது. மேலும் மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அதிகாரிகள், மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டத் தலைவர்கள் தலைமையில் பேரணி நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

| வ.எண் | மாவட்டம் | நிர்வாகத்தின் சார்பாக | FORUM சார்பாக |
|---|---|---|---|
| 01 | சேலம் | திருமதி N.பூங்குழலி ITS, TN Circle<br>திரு S.சபீஷ் ITS PGM, சேலம். | தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் (BSNLEU),<br>தோழர் K.ராஜசேகரன் (AIBSNLOA),<br>தோழர் M.R.தியாகராஜன் (SNEA)<br>தோழர் M.C.ரவி AIBSNLEA, |
| 02 | கோவை | திரு D.சிவராஜ் ITS, PGM, கோவை | தோழர் S.செல்லப்பா (BSNLEU)<br>தோழர் S.சிவகுமார் (AIBSNLEA)<br>தோழர் T.K.செந்தூர் பாண்டியன் (SNEA)<br>தோழர் S.E.மணியன் (AIBSNLOA) |
| 03 | திருச்சி | திரு V.ராஜு ITS PGM திருச்சி | தோழர் R.ராஜசேகர் (SNEA)<br>தோழர் S.சுப்பிரமணி (BSNLEU)<br>தோழர் P.வெங்கடேசன் (AIBSNLEA)<br>தோழர் M.S.ராதாகிருஷ்ணன் &<br>தோழர் T.குணசேகரன்( (AIBSNLOA) |
| 04 | மதுரை | திருமதி S.E.ராஜம் ITS PGM மதுரை | தோழர் P.இந்திரா (BSNLEU)<br>தோழர் S.பாலசுப்ரமணியன் (SNEA)<br>தோழர் C.துரையரசன்(AIBSNLEA)<br>தோழர் S.பாலமுருகன் (AIBSNLOA) |
| 05 | வேலூர் | திரு T.சந்தோஷம் ITS, Sr.GM வேலூர். | தோழர் M.முருகையா (BSNLEU)<br>தோழர் P.S.காங்கேஷ் (SNEA),<br>தோழர் N.பங்காரு கிருஷ்ணசாமி (AIBSNLEA)<br>தோழர் R.செல்வகுமார் (AIBSNLOA) |

மற்ற அனைத்து SSA தலைநகர்களிலும் அந்தந்த பொது மேலாளர்களும், மாவட்ட FORUM தலைவர்களும் பங்கேற்பார்கள்.

இந்த முடிவுகளை மாவட்ட ஃபோரம் தலைவர்கள் அதிகாரிகளுடன் இணைந்து இயக்கங்களை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

**தோழமையுடன்,**

| S.CHELLAPPA, | A.BABU RADHAKRISHNAN | R.RAJASEKAR | S.SIVAKUMAR | K.RAJASEKARAN |
|---|---|---|---|---|
| CONVENOR | மாநிலசெயலர் | மாநிலசெயலர் | மாநிலசெயலர் | அ.இ.தலைவர் |
| FORUM | BSNLEU | SNEA (I) | AIBSNLEA | AIBSNLOA. |